பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

**31 01 2025 FRIDAY** **6 30 PM**

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான பாதையில் மத்திய அரசு சென்று கொண்டிருப்பதை குடியரசுத் தலைவர் உரை பிரதிபலிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- மகளிர் மேம்பாட்டிற்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவது குடியரசுத்தலைவர் உரையில் இடம்பெற்றிருப்பதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.
- நடப்பு நிதியாண்டில் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி ஆறு புள்ளி நான்கு சதவீதமாக இருக்கும் என்று பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் 658 சிறப்பு மருத்துவர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.
- 19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

>>>>><<<<<

நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்கியது.

நடப்பாண்டின் முதல் கூட்டத்தொடர் என்பதால், இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு உரையாற்றினார்.

வளர்ச்சித் திட்டப் பணிகளை மத்திய அரசு இதுவரை இல்லாத அளவிலான வேகத்தில் மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

முதலீட்டு செலவினங்களுக்கான ஒதுக்கீடு 11 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரிக்கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் இது 2 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு இருந்ததாகவும் அவர் கூறினார்.

நாடுமுழுவதும் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

உற்பத்திக்கான இந்தியா இயக்கம், உலகத்திற்கானதாக உருவெடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பிரதமரின் நான்காம் கட்ட கிராமப்புற வீட்டு வசதி திட்டத்திற்காக 70 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மெட்ரோ ரயில் சேவைக்கான கட்டமைப்பு வசதிகள் நாடுமுழுவதும் விரிவுபடுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

கடந்த ஆறு மாதங்களில் மட்டும் புதிதாக 17 வந்தேபாரத் ரயில்கள் இயக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

மத்திய அரசு ஊழியர்களுக்கான எட்டாவது ஊதியக்குழு அமைக்க முடிவு செய்திருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

வரும் ஆண்டுகளில் ஊதியஉயர்வுக்கு இது வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

தரமான கல்வி, புதிய வேலைவாய்ப்புகள், மகளிர் மேம்பாடு போன்றவற்றிற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாகவும் குடியரசுத் தலைவர் கூறினார்.

சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்காக பெரிய அளவிலான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

விளையாட்டுத் துறைகளில் இந்தியா பல்வேறு சாதனைகளை படைத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உத்தரபிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகாகும்பமேளா கலாச்சார பாரம்பரியம் மற்றும் ஒற்றுமையை வெளிப்படுத்துவதாக அவர் கூறினார்.

இந்த நிகழ்வின் போது நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் மறைவிற்கும் திருமதி. திரௌபதி முர்மு புகழஞ்சலி செலுத்தினார்.

>>>>><<<<<

வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான பாதையில் மத்திய அரசு சென்று கொண்டிருப்பதை குடியரசுத் தலைவர் உரை பிரதிபலிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இளையோருக்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளது என்பதை இந்த உரை உணர்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

மகளிர் மேம்பாட்டிற்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவது குடியரசுத்தலைவர் உரையில் இடம்பெற்றிருப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மத்திய அரசின் திட்டங்கள் மூலம் அனைத்து தரப்பினரும் பயனடைந்து வருவதை இந்த உரை எடுத்துரைப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

குடியரசுத்தலைவரின் உரை வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்காக மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை எடுத்துரைத்திருப்பதாக பிஜேபி கூறியுள்ளது.

இந்த உரை ஏமாற்றமளிப்பதாக உள்ளது என்று காங்கிரஸ் கருத்து தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

நடப்பு நிதியாண்டில் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி ஆறு புள்ளி நான்கு சதவீதமாக இருக்கும் என்று பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன், இந்த அறிக்கையை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் இன்று தாக்கல் செய்தார்.

வரும் நிதியாண்டில் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி 6 புள்ளி 3 சதவீதத்திலிருந்து 6 புள்ளி எட்டு சதவீதமாக இருக்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

- ✓ சுகாதாரத்துறைக்கான நிதிஒதுக்கீடு பெருமளவு உயர்ந்துள்ளது
- ✓ பள்ளிகளில் கனிணி பயன்பாடு 59 புள்ளி ஒன்பது சதவீதமாக அதிகரித்துள்ளது
- ✓ பணவீக்கம் கட்டுக்குள் உள்ளது
- ✓ வங்கி மற்றும் காப்பீட்டு துறையும் சீரான வளர்ச்சியை கண்டுகள்ளது
- ✓ நாட்டின் வளர்ச்சிக்கு அனைத்து துறைகளும் பங்களித்துள்ளன

போன்ற அம்சங்களும் பொருளாதார ஆய்வறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

இதற்கிடையே, நாளை தாக்கல் செய்யப்படவுள்ள மத்திய பட்ஜெட்டில் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத் தொகையை அதிகரிக்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பாக உள்ளது என்று வேலூர் மாவட்ட விவசாயிகள் சங்கத்தைச் சேர்ந்த ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - விவசாயி 36 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தமிழகத்தில் 658 சிறப்பு மருத்துவர்கள் நியமிக்கப்படவுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

ராமேஸ்வரம் பாம்பன் கடல் பகுதியில் புதிதாக கட்டப்பட்டுள்ள செங்குத்து தூக்குப்பாலம் இன்று முதல்முறையாக திறக்கப்பட்டு, கடலோர காவல்படைக்கு சொந்தமான ரோந்துப் படகு கடந்து சென்றது.

செங்குத்து தூக்குப்பாலத்தை முதல் முறையாக ரயில்வே இன்று பரிசோதித்து பார்த்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கார்த்திகேயன் 36 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப் பிரிவு வழங்கும் ‘செய்திச்சுடர்’ நிகழ்ச்சியில், மத்திய பட்ஜெட் எதிர்பார்ப்புகள் குறித்து மூத்த பத்திரிகையாளர் திரு. வெங்கடேஷுடன் எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணல் இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜாபேட்டை - பாலாறு அணைக்கட்டு தடுப்பணையின் புனரமைப்பு பணிகளை மாநில அமைச்சர்கள் திரு. துரைமுருகன், திரு. காந்தி ஆகியோர் இன்று தொடங்கி வைத்தனர்.

>>>>><<<<<

மதுரை மாவட்டம், செக்கானூரணியில் புதிய பேருந்து நிலையத்திற்கான கட்டுமானப் பணிகளை மாநில அமைச்சர் திரு. மூர்த்தி இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

பெரம்பலூர் மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நடை பயணத்தை மாநில அமைச்சர் திரு. சிவசங்கர் இன்று தொடங்கி வைத்தார்

>>>>><<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் சாலை பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு. பிரபுசங்கர் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட சர்வ தீர்த்தக்குளம் அருகே நெகிழி கழிவு சேகரிப்பு முகாமை ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>><<<<<

பெங்களூருவிலிருந்து கரூர் வழியாக தடை செய்யப்பட்ட குட்கா பொருட்களை கடத்தி வந்த 3 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>><<<<<

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலின் தெப்பத்திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

19 வயதுக்குட்பட்டோருக்கான உலக கோப்பை மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

கோலாலம்பூரில் இன்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா 9 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வென்றது.

இப்போட்டியில் டாஸ் வென்ற முதலில் பேட் செய்த இங்கிலாந்து, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 113 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக Davina Perrin 45 ரன் எடுத்தார்.

Parunika Sisodia மற்றும் வைஷ்ணவி சர்மா அபாரமாக பந்து வீசி தலா மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

114 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த இந்தியா, 15 ஓவரில் ஒரு விக்கெட் இழப்புக்கு 117 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

நாளை மறுநாள் நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் இந்தியா – தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

இந்தியா - இங்கிலாந்து இடையேயான நான்காவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்னும் சற்று நேரத்தில் தொடங்குகிறது.

புனேயில் நடைபெறவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற இங்கிலாந்து முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இந்தியா 2-1 என்ற ஆட்டக்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

>>>>><<<<<

தேசிய விளையாட்டுப் போட்டியில் இன்று தமிழகத்தின் அபிஷேக் வெண்கலப்பதக்கம் வென்றார்.

உத்ராகண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் Spring Board பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>END<<<<<